**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, THARANGAMBADI.**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXV of BNSS)

**C.C.No. 218-2025**

| | | | |
|---|---|---|---|
| Deposition of LW2 | | Examined as : PW 2 | |
| Name | : முத்து | Defence | : |
| Father's Name | : ராமச்சந்திரன் | Court | : |
| Village | : ஆவிழிக்கரை | Taluk | : தரங்கம்பாடி |
| Calling | : | | |
| Age | : 25/2026 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act Bharathiya Shakshiya Adhiniyam the day 19.06.2026.

சத்தியபிரமாணம் பெறப்பட்டது.

எதிரிகள் ஆஜர்.

<u>முதல் விசாரணை:–</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஹோட்டலில் வெயிட்டராக வேலை செய்து வருகிறேன். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஆவிழிக்கரை BSNL cell tower அருகில் நேதாஜியும், ரோஹித் மற்றும் நானும் பேசிக்கொண்டிருந்தபோது சுமார் 20, 30 நபர்கள் கூட்டமாக இருந்தார்கள். அப்போது அவர்களுக்குள் நடந்த சண்டையில் பக்கத்தில் இருந்த எனக்கு வலது முன்கையில் காயம் ஏற்பட்டது. எனது நண்பர் ரோஹித்கும் தலையில் காயம் ஏற்பட்டது. அதனால் அந்த கூட்டத்தில் ஆஜர் எதிரிகளும் இருந்ததால் அவர்கள் தான் என்னையும் என் நண்பனையும் தாக்கி இருப்பார்கள் என்ற சந்தேகத்தில் ரோஹித் புகார் கொடுத்துவிட்டார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு சாட்சி அரசு தரப்பு வழக்கை அனுசரித்து சாட்சியம் அளிக்காததால் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு பரிசீலனைக்கு பின்னர் அனுமதிக்கப்பட்டது)**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள். தற்சமயம் எதிரிகளுடன் சமாதனமாகி கையொப்பம் செய்துள்ளேன். சமாதன மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். அது யாருடைய வற்புறுத்தலோ தூண்டுதலோ இன்றி தன்னிச்சையாக சமாதானம் செய்துகொண்டேன் என்றால் சரிதான். கடந்த 20.04.2024

அன்று மதியம் 3.15 மணியளவில் நானும் ரோஹித், முத்துவும் அவிழிக்கரை BSNL Cell tower அருகே பேசிக்கொண்டிருந்தபோது ஸ்டாலினுக்கும் அங்குள்ளவர்களுக்கும் ஏற்பட்ட சண்டையில் ராகுல், விஜய், சரபோஜி ஆகிய மூவரும் எங்களைப் பார்த்து உனக்கென்ன வேலை நாட்டாமை பண்ண வந்திட்ட குச்சிக்காரி மகனே, தேவடியா மகனே தேவடியா பயலே என அசிங்கமான வார்த்தைகளால் என்னை திட்டியதோடு, ராகுல் கையில் வைத்திருந்த பீர் பாட்டிலால் ரோஹித்தை தலையில் அடித்தார் என்றும், தடுக்க வந்த என்னை கட்டையால் முன்கையில் அடித்தார்கள் என்றால் சரியல்ல. மேலும் எங்களை கொல்லாமல் விடமாட்டேன் என்று கொலை மிரட்டல் விட்டார்கள் என்றும் போலீசார் விசாரணையிலும் கூறிவிட்டு தற்போது ஆஜர் எதிரிகள் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களுடன் சமாதானம் செய்துக்கொண்டு அரசு தரப்பிற்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். குறுக்கு விசாரணை இல்லை.**